

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நேற்று முன்தினம் (24.10.2025) தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை நிதியிலிருந்து 22 மாற்றுத்திறனாளி விளையாட்டு வீரர்கள் உட்பட 25 விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு சர்வதேச அளவிலான போட்டிகளில் கலந்து கொள்வதற்காகவும், 8 விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு விளையாட்டு உபகரணங்களை வாங்குவதற்காகவும் மொத்தம் 33 வீரர், வீராங்கனை களுக்கு மொத்தம் 43.20 லட்சம் ரூபாய்க்கான காசோலைகளை வழங்கினார். இந்நிகழ்வில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேக நாத ரெட்டி, மற்றும் விளையாட்டு வீரர், வீராங்கனைகள் கலந்து கொண்டனர்.

# கழகத்தின் 'வேலுநாச்சியார்!'



காார்முகில் இடிமு ழக்கம்!
கனல்சிந்தும் வெடிமு ழக்கம்!
போர்முனை ஒலிமு ழக்கம்!
பொதுக்கூட்ட உரைமு ழக்கம்!
யார்நிகர்? அவர்க்கே! அந்தோ!
ஆர்த்திட மேடை யேறி
"நூர்ஜகான் பேகம்" வந்தால்
நொறுங்குமே பகைவர் கோட்டை!

அலைமோதும் கருத்து வெள்ளம்!
ஆற்றொழுக் கான பேச்சு!
வலைவீசிக் கேட்போர் தம்மை
வசப்படுத் திடுமோர் ஆற்றல்!
தலைவர்தம் இதயம் தொட்டுத்
தமிழ்த்தொண்டர் நெஞ்ச மெல்லாம்
நிலையான இடம்பி டித்த
நிகரற்ற சொல்லின் செல்வி!

திண்டோள்கள் மிக்க நூறு
தீரர்க்கு நிகர்த்த வீரம்!
பெண்டிர்க்குப் பெருமை சேர்த்த
பெருந்தகை! அன்பின் ஊற்று!
முண்டாசுக் கவிஞன் சொன்ன
முற்போக்குப் புதுமைப் பெண்! நம்
திண்டுக்கல் மண்கொ டுத்த
சீதனம்! தியாக மங்கை!

எக்கேடு கெட்டால் இங்கே
எனக்கென்ன? என்றில் லாமல்
தக்கார்தம் தலைமை யின்கீழ்
. தமிழ்நாடு விளங்க வேண்டித்
திக்கெட்டும் முரசொ லித்த
தென்பாண்டித் தமிழ்ம றத்தி!
முக்காடு போட்ட கொள்கை
முழுநிலா! எங்கள் பேகம்!

படைகூட்டி எவர்வந் தாலும்
பார்ப்போமே ஒருகை! என்பார்!
நடைபோட்டுக் களத்தில் 'வேலு
நாச்சியார்' சிலிர்த்த தைப்போல்
தடையாவும் தனது பேச்சால்
தகர்த்தவர்! அவர் யார்? என்றால்
நொடிதோறும் வந்து நிற்கும்
**"நூர்ஜகான் பேகம்"** தோற்றம்!

தொழில் அல்ல! பொதுவாழ்க் கையைத்
தொண்டென நினைத்த நல்லார்!
கழகமுப் பெரும்வி ழாவில்
'கலைஞரின் விருது' பெற்று,
விழிகளில் உவகை பொங்க
வீரமோ மனத்தில் பொங்க
மழையென அவர்பொ ழிந்த
மகிழ்வுரை மறக்கப் போமோ?

" தற்காலம் இருண்ட காலம்!
தளபதி முதல்வர் ஆகும்
பொற்காலம் மலரச் செய்வோம்!
புறப்படு வீர்கள்!" என்றே
நற்கோல உரையி னை, மா
நாட்டில்,ஈ ரோட்டில் ஆற்றிச்
சொற்கோலம் வரைந்த பேச்சின்
சுவையினை மறக்கப் போமோ?

நகைமுகம் மறக்கப் போமோ?
நடையினை மறக்கப் போமோ?
குகைவிட்டுப் பாயும் வேங்கைக்
குணத்தினை மறக்கப் போமோ?
மகளிர்தம் அணிக்கு வாய்த்த
மாணிக்கத் திருவி ளக்கு!
புகழ்வாழ்க! என்றே கண்ணீர்ப்
பூக்களால் வணங்கி நிற்போம்!

**கவிச்சுடர்**
**கவிதைப்பித்தன்**



### திரு.வி.க.நகர் மண்டலம் – படவட்டம்மன் கோயில் தெருவில் உள்ள சென்னை உயர்நிலைப் பள்ளியில்

# ரூ.5.96 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய பள்ளிக் கட்டிடம்!

## அமைச்சர் கே.என்.நேரு திறந்து வைத்தார்!

### ரூ.9.64 கோடி மதிப்பில் புதிய வணிக வளாகம் கட்டும் பணிக்கு அடிக்கல் !

சென்னை, அக்.26-

நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, திரு.வி.க.நகர் மண்டலம், படவட்டம்மன் கோயில் தெருவில் உள்ள சென்னை உயர்நிலைப்பள்ளியில் ரூ.5.96 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய பள்ளிக் கட்டடத்தைப் பயன்பாட்டிற்குத் திறந்து வைத்து, ஜமாலியா பகுதியில் ரூ.9.64 கோடி மதிப்பீட்டில் புதிய வணிக வளாகம் கட்டும் பணியினை அடிக்கல் நாட்டித் தொடங்கி வைத்தார்.

நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என். நேரு திரு.வி.க.நகர் மண்டலம், வார்டு76, குயப்பேட்டை, படவட்டம்மன் கோயில் தெருவில் உள்ள சென்னை உயர்நிலைப்பள்ளியில் சிங்கார சென்னை 2.0 திட்ட நிதியில் ரூ.5.96 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட கூடுதல் பள்ளிக் கட்டடத்தை 24.10.2025 அன்று பயன்பாட்டிற்குத் திறந்து வைத்து, அங்கு பயிலும் மாணவர்களுடன் கலந்துரையாடினார்.

**மாணவர்கள் - பணியாளர்களுக்குப் பரிசுகள்!**

பின்னர், இப்பள்ளியில் பயிலும் 354 மாணவர்களுக்கு புத்தகப்பை, வாட்டர் பாட்டில், நோட்டுப் புத்தகம் மற்றும் பேனா உள்ளிட்ட தொகுப்பினை வழங்கினார். மேலும் இப்பள்ளியில் பணிபுரியும் 28 ஆசிரியர்கள் மற்றும் 10 ஆசிரியர் அல்லாத பணியாளர்கள் உள்ளிட்ட 38 நபர்களுக்கு பரிசுப் பொருட்களை வழங்கிப் பாராட்டினார்.

இந்தப் பள்ளிக் கட்டடம் 1473 ச.மீ. பரப்பளவில் தரைத்தளம் மற்றும் இரண்டு தளங்களுடன் கட்டப்பட்டுள்ளது. தரைத்தளத்தில் 6 வகுப்பறைகளும், முதல் தளத்தில் 7 வகுப்பறைகளும், இரண்டாவது தளத்தில் அறிவியல், இயற்பியல் ஆய்வகங்கள், நூலகம் மற்றும் கலையரங்கம் ஆகியவை அமைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் இப்பள்ளியில் 6 முதல் 10ஆம் வகுப்பு வரை பயிலும் 354 மாணவர்கள் பயன்பெறுவர்.

இந்நிகழ்வில் நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் பேசும்போது தெரிவித்ததாவது:-

பெருநகர சென்னை மாநகராட்சியில் 417 சென்னை பள்ளிகள் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. சென்னை பள்ளிகளில் 75 ஆயிரம் மாணவர்கள் கல்வி பயின்று வந்த நிலையில் முதலமைச்சர் அவர்கள் சென்னை மாநகர மேயராக இருந்த போது பல்வேறு அடிப்படை உட்கட்டமைப்புகளை உருவாக்கி, மாணவர்களின் எண்ணிக்கையினை ஒரு இலட்சத்திற்கு உயர்த்தினார்.

**அரசின் திட்டங்களை மாணவர்கள் பயன்படுத்துவீர்!**

தற்போது, முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி கல்விக்கான பல்வேறு திட்டங்களால் சென்னை பள்ளிகளில் ஆசிரியர்களின் கற்பித்தல் திறன், பள்ளியின் உட்கட்டமைப்பு மேம்பாடு உள்ளிட்ட அனைத்து வசதிகளும் மேலும் சிறப்பான முறையில் மேற்கொள்ளப்பட்டுள்ளதன் காரணமாக, தற்போது 1.17 இலட்சம் மாணவர்கள் சென்னை பள்ளிகளில் கல்வி பயின்று வருகின்றனர். தமிழ்நாடு அரசின் சார்பில் வழங்கப்படும் அனைத்து கல்வித் திட்டங்களையும், உதவிகளையும் மாணவ, மாணவியர் நன்கு பயன்படுத்தி கல்வியில் சிறந்து விளங்க வேண்டும் எனப் பேசினார்.

இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பேசும்போது, "முதலமைச்சர் அவர்கள் கல்விக்கான திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். அவர்களின் வழிகாட்டுதலின்படி, சென்னை மாநகராட்சியில் கட்டப்படும் பள்ளிக் கட்டடங்கள் தனியாருக்கு நிகராகவும், அதைவிட அதிக வசதிகளை கொண்டதாகவும், அழகிய வடிவமைப்புடனும் கட்டப்பட்டு வருகிறது.

இதன் காரணமாக, பள்ளிக்கு வருகை தரும் மாணவ, மாணவியர் எண்ணிக்கை அதிகரித்து, கல்விக்கான சீர்மிகு திட்டங்களைப் பயன்படுத்தி அவர்கள் உயர்வான கல்வியைப் பெற முடிகிறது" எனத் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து, நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர், வார்டு-74, பெரம்பூர் நெடுஞ்சாலை, ஜமாலியா பகுதியில் மாநகராட்சியின் மூலதன நிதியில் ரூ.9.64 கோடி மதிப்பீட்டில் புதிய வணிக வளாகம் கட்டும் பணியினை அடிக்கல் நாட்டித் தொடங்கி வைத்தார்.

இந்த வளாகத்தில் ஏற்கனவே பழுதடைந்த நிலையில் இருந்த கட்டடத்தினை இடித்து அகற்றிவிட்டு, புதியதாக வணிக வளாகம் 2,371 ச.மீ. பரப்பளவில் தரைத்தளம் மற்றும் இரண்டு தளங்களுடன் 11 கடைகள் கட்டப்படவுள்ளது.

இந்நிகழ்ச்சியில், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, மேயர் திருமதி ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி (திரு.வி.க.நகர்), ஆ.வெற்றி அழகன் (வில்லிவாக்கம்), ஜோசப் சாமுவேல் (அம்பத்தூர்), துணை மேயர் மு. மகேஷ்குமார், ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், மத்திய வட்டார துணை ஆணையாளர் எச்.ஆர். கௌஷிக், நிலைக்குழுத் தலைவர்கள் த.விசுவநாதன் (கல்வி), டாக்டர் கோ. சாந்தகுமாரி (பொதுசுகாதாரம்), மண்டலக்குழுத் தலைவர் திருமதி சரிதா மகேஷ்குமார், மாமன்ற உறுப்பினர் திருமதி எஸ். தமிழ்ச்செல்வி உள்ளிட்ட மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் அலுவலர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர்.

### தமிழ்நாட்டில் கொள்முதல் செய்யப்படவுள்ள

# நெல்லின் ஈரப்பதத்தை ஆய்வு செய்திட - ஒன்றிய அரசின் 3 குழுக்கள்!

## பல்வேறு மாவட்டங்களில் நேரில் ஆய்வு!

சென்னை, அக்.26-

தமிழ்நாட்டில் நடப்பு 2025-2026 ஆம் ஆண்டிற்கான குறுவை பருவ நெல் கொள்முதல் செப்டம்பர் 1-ஆம் தேதி முதல் தொடங்கி 1,839 நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் விவசாயிகளிடமிருந்து நெல் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.

இந்நிலையில் தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை துவங்கியுள்ள நிலையில் விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்படும் நெல்லின் ஈரப்பத அளவினை 17% லிருந்து 22% வரை அதிகரிக்க தமிழ்நாடு அரசால் கடந்த 19.10.2025 அன்று ஒன்றிய அரசிடம் அனுமதி கோரப்பட்டிருந்தது.

அதனை தொடந்து, ஒன்றிய அரசு தமிழ்நாட்டில் கொள்முதல் செய்யப்படவுள்ள நெல்லின் ஈரப்பதத்தினை ஆய்வு செய்திட மூன்று நிபுணர் அடங்கிய குழுக்களை நியமித்து ஆணையிடப்பட்டுள்ளது. அந்நிபுணர் குழு நேற்று (25.10.2025) முதல் தமிழ்நாட்டில் கொள்முதல் செய்யப்படவுள்ள நெல்லின் ஈரப்பதம் குறித்து மாவட்டந்தோறும் ஆய்வு செய்ய திட்டமிட்டுள்ளனர்.

அதன்படி முதல் குழு நேற்று (25.10.2025) செங்கல்பட்டு மாவட்டத்திலும், 26.10.2025 அன்று திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களிலும், இரண்டாவது குழு நேற்று (25.10.2025) தஞ்சாவூர் மற்றும் மயிலாடுதுறை மாவட்டங்களிலும், 26.10.2025 அன்று திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களிலும், 27.10.2025 அன்று கடலூர் மாவட்டத்திலும் மற்றும் மூன்றாவது குழு நேற்று (25.10.2025) திருச்சி மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களிலும் 26.10.2025 அன்று மதுரை மற்றும் தேனி மாவட்டங்களிலும் ஆய்வு செய்ய உள்ளனர் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

### அமைச்சர் துரைமுருகன் தலைமை! எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி. நடத்தி வைக்கிறார்!

# தலைமைக் கழகப் பேச்சாளர் எழும்பூர் மு.கோபி இல்ல மணவிழா!

## அமைச்சர்கள் மு.பெ.சாமிநாதன் – மா.சுப்பிரமணியன் – தா.மோ.அன்பரசன் – முன்னணியினர் வாழ்த்து!

சென்னை, அக்.26-

தலைமைக் கழகப் பேச்சாளர் எழும்பூர் மு.கோபி - கோ.ரமாதேவி ஆகியோரின் புதல்வி கோ.சாய்லட்சுமி என்கிற சாலினி - எம். மனோஜ்ராஜ் ஆகியோரின் மணவிழா நாளை (27.10.2025 - திங்கட்கிழமை) காலை 9 மணிக்கு சென்னை, திருவொற்றியூர் சௌந்தர பாண்டியன் நகரில் உள்ள வி.கே.மகாலில் நடைபெறுகின்றது. அதனைத் தொடர்ந்து பகல் 12 மணியளவில் மணவிழா வரவேற்பு நிகழ்ச்சியும் நடைபெறுகின்றது.

மண விழாவில் கழகப் பொதுச் செயலாளர் - அமைச்சர் துரைமுருகன் அவர்கள் தலைமை வகிக்கிறார்.

திருமணத்தை கழக கொள்கை பரப்பு செயலாளர், உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினர் ஜெகத்ரட்சகன் எம்.பி. நடத்தி வைக்கிறார்.

அமைச்சர்கள் மு.பெ. சாமிநாதன், மா.சுப்பிரமணியன், தா.மோ.அன்பரசன் மற்றும் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ., செஞ்சி கே.எஸ்.மஸ்தான் எம்.எல்.ஏ., தயாநிதி மாறன் எம்.பி., காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட கழக செயலாளர் க. சுந்தர் எம்.எல்.ஏ., கலாநிதி வீராசாமி எம்.பி.,

திருவள்ளூர் கிழக்கு மாவட்ட கழக செயலாளர் ரமேஷ் ராஜ், எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ., சென்னை மேற்கு மாவட்ட கழக செயலாளர் தே.சிற்றரசு எம்.சி., டி.ஜெ.கோவிந்தராஜ் எம்.எல்.ஏ., எபினேசர் எம்.எல்.ஏ., தி.மு.தனியரசு எம்.சி., ஏ.வி.ஆறுமுகம் எம்.சி., அருள் தாஸ் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

மாநில மீனவர் அணி துணைத் தலைவர் கே.பி. சங்கர் எம்.எல்.ஏ., ஐட்ரீம் மூர்த்தி எம்.எல்.ஏ., எழும்பூர் கோபிநாத் ஆகியோர் வரவேற்றுப் பேசுகின்றனர்.

மணமக்களை டி.ஆர். பாலு, அமைச்சர் கே.என். நேரு, கனிமொழி கருணாநிதி எம்.பி., அமைச்சர் ஐ.பெரியசாமி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் திருச்சி சிவா, அ.ராசா, அந்தியூர் செல்வராஜ் மற்றும் ஆர்.எஸ்.பாரதி, அன்பகம் கலை, ஆஸ்டின், தாயகம் கவி, பூச்சி முருகன், துறைமுகம் காஜா, பத்மநாபன், தனபால் உள்பட அமைச்சர் பெருமக்கள், மாவட்ட கழக செயலாளர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைக் கழக சொற்பொழிவாளர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், அனைத்து அணியின் மாநில, மாவட்ட, நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்ட, கிளைச் செயலாளர்கள், நிர்வாகிகள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.



கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம் பர்கூர் சட்டமன்றத் தொகுதி பர்கூர் பேரூராட்சியில் முதல்அமைச்சரின் வீடு மறு கட்டுமான திட்டத்தின் கீழ் 94 பேருக்கு ரூ.2 கோடியே 24 லட்சம் மதிப்பீட்டில் வீடுகள் மறு கட்டுமானம் செய்வதற்கான பணி ஆணைகளை கிழக்கு மாவட்டச் செயலாளர் மதியழகன் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு வழங்கினார். நிகழ்ச்சியில் மாநில வர்த்தகர் அணி துணை செயலாளர் அன்பரசன், பர்கூர் பேரூராட்சித் தலைவர் சந்தோஷ்குமார், பேரூர் கழக செயலாளர் வெங்கடப்பன், ஒன்றிய செயலாளர் ராஜேந்திரன் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



மயிலாடுதுறை மாவட்டம் குத்தாலம் வட்டம் மேலையூர் கிராமத்தில் இயங்கி வரும் நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் நெல் கொள்முதல் மற்றும் கொள்முதல் செய்யப்பட்ட நெல் மூட்டைகளின் நகர்வு பணிகளை உணவுத்துறை அமைச்சர் அர.சக்கரபாணி, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள். உடன் மாவட்ட கழக செயலாளர், நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ., எம்.பன்னீர்செல்வம் எம்.எல்.ஏ., குத்தாலம் க.அன்பழகன், ஏ.அண்ணாதுரை, மாவட்ட ஆட்சியர் ஹெச்.எஸ்.ஸ்ரீகாந்த், எஸ்.ராஜகுமார் எம்.எல்.ஏ., எஸ்.செல்வமணி, மங்கை எம்.சங்கர் மற்றும் பலர் உள்ளனர்.